BRAMPTON **Service and Information Update**

# தீபாவளி பண்டிகை மற்றும் புத்தாண்டுக் கொண்டாட்டத்திற்கான பட்டாசு விற்பனையாளர்கள் பயிற்சி துவக்கம்

ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 6, 2020) –தீபாவளி பண்டிகை மற்றும் புத்தாண்டு நிகழ்ச்சிகளுக்கான பட்டாசு விற்பனை செய்யவிருக்கின்ற சில்லறை விற்பனையாளர்களுக்கு ஆன்லைன் பயிற்சி செயல்முறையை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் துவக்கியிருக்கிறது.

இந்தப் பயிற்சி கட்டாயமாகும், மற்றும் விறபனையாளர்களுக்கான உரிமம் கொடுக்கப்படுவதற்கு முன்பாக இந்தப் பயிற்சி எடுத்துக்கொள்வதும் கட்டாயமாகும்.

இந்தப் பயிற்சி வகுப்பிற்கு பதிவு செய்ய, விற்பனையாளர்கள் ப்ராம்ப்ட்டன் தீத்தடுப்பு அமைப்பை 905.874.2740 என்ற எண்ணில் அல்லது fire.prevention@brampton.ca எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொண்டால் மேல்விபரம் மின்னஞ்சல் மூலமாக விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்கப்படும்.

கோவிட்-19 க்கான சுகாதார மற்றும் பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் அமலில் இருப்பதன் காரணமாக, இந்தப் பயிற்சியானது ஐந்து எளிய வழிகளில் ஆன்லைன் மூலமாக வழங்கப்படும்:

1. 2020 ஆண்டுக்கான பட்டாசு சில்லறை விற்பனையாளர் பாடவகுப்பிற்கான கட்டணத்தை செலுத்தி தீயணைப்பு ஆய்வுக்காக விண்ணப்பிக்கவும்
2. பட்டாசு சில்லறை விற்பனையாளர்  பயிற்சி வீடியோவை பார்க்கவும்
3. பட்டாசு சில்லறை விற்பனையாளர் கேள்வித்தாளை நிரப்பவும்
4. உரிமத்திற்கான விண்ணப்பம் சமர்ப்பித்து கட்டணம் செலுத்தவும்.
   விபரங்களுக்கு licensing@brampton.ca ஐத் தொடர்பு கொள்ளவும்.
5. 2020 ஆண்டுக்கான பட்டாசு சில்லறை விற்பனையாளர்  உரிமத்தை சிட்டி ஹால்-லிருந்து நேரில் பெற்றுக்கொள்ளவும். சிட்டி ஹால்-க்கு வருகை தருவதற்கு வருகை முன்பதிவு அவசியம்.

அனுமதிக்கப்படும் பட்டாசுகளின் வகைகள், இருப்பு வைப்பதற்கான விதிகள், காட்சிக்கு வைத்தல் மற்றும் விறபனை செய்தல், வாடிக்கையாளர் அடையாள தேவைகள் மற்றும் மற்றும் பட்டாசு வாங்குவோருக்கு வினியோகம் செய்வதற்கான பாதுகாப்புக்கான வழிகாட்டுதல்கள் ஆகியவை பட்டாசு சில்லறை விற்பனையாளர் பயிற்சியில் அடங்கும்.

பல இடங்களில் கடை வைக்கவிருக்கும் சில்லறை விற்பனையாளர்கள், தங்கள் வகையில் கடைக்கு ஒருவராவது இந்தப் பயிற்சி வகுப்பை முடித்திருப்பது அவசியம்.  தீத்தடுப்பு ஆய்வு மேற்கொள்வதற்கான விண்ணப்பம் செய்ய கடைசி நாள் மற்றும்  நேரம், 2020 அக்டோபர் 30 வெள்ளிக்கிழமை மதியம் ஆகும்.

BRAMPTON Service and Information Update

ப்ராம்ப்ட்டன் நகரின் பட்டாசுகளுக்கான உபசட்டமானது, குறைவான தூரமே சென்று வெடிக்கும் பட்டாசுகளை மட்டுமே விற்கவும் உபயோகிக்கவும் செய்ய அனுமதிக்கிறது (பற்ற வைத்தவுடன் 3 மீட்டர் அல்லது 10 அடி தூரமே பறந்து செல்லக்கூடியவை); இது ஆண்டுக்கு நான்கு முறை அனுமதிக்கப்படுகிறது – விக்டோரியா தினம், கனடா தினம், தீபாவளி, புத்தாண்டு தினம்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca